# இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு

## உபவேந்தர் பதவி

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களுக்காக அழைப்பு விடுக்கின்றது.

1978 ம் ஆண்டின் 16ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்ட ஏற்பாடுகளின்கீழ் உபவேந்தர் பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலர் ஆவார். அவர் பல்கலைக்கழகத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மைக் கல்விசார் அதிகாரி என்பதுடன் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். அவர் பல்கலைக்கழக பேரவை மற்றும் மூதவை ஆகிய இரண்டினதும் பதவிவழி உறுப்பினரும் அவற்றின் தவிசாளரும் ஆவார். உப வேந்தர் தனது பதவியிலிருந்து முன்கூட்டியே விலகினால் அல்லது 1978 ம் ஆண்டின் 16ம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்தங்களுக்கமைய பதவியிலிருந்து நீக்கப்பட்டாலொழிய மூன்று வருடகாலம் அல்லது தமது அறுபத்தைந்தாவது வயது இவற்றில் முதலில் நேரிடுவது வரை பதவி வகிக்கலாம்.

உபவேந்தர் என்பவர் கல்விசார் தலைமைத்துவம் வழங்குதல், முறைப்படுத்துதல், நடாத்திச் செல்லுதல் என்பவற்றோடு முகாமைத்துவக் கொள்கைகளை அறிமுகம் செய்வதற்கும் மற்றும் பல்கலைக்கழகப் பொது நிர்வாகமான பேரவைத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் பொறுப்பானவர் என்பதால் அவர் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம் மற்றும் திறன்மிகு பாகுபாடற்ற தலைமைத்துவம் ஆகியவற்றின் நியமங்களை நிலைநிறுத்துபவராக இருத்தல் வேண்டும்.

வெற்றிகரமான விண்ணப்பதாரி வலுவான ஆய்வுத் தேட்டம் அடங்கிய உயர் கல்விசார் சாதனைப் பதிவுகள், சான்றுபகர் தலைமைத்துவப் பண்புகள், பன்முகக் குழுமங்களுடன் பாரபட்சமின்றிச் செயலாற்றும் தொடர்பாடல் திறன், கொள்கை நடைமுறைகள் தொடர்பான தெளிவான புரிதல் மற்றும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் அர்ப்பணிப்பு ஆகியவை உடையவராயிருத்தல் வேண்டும். மேலும் அவர் சமூக அர்ப்பணிப்பு அடங்கலாக பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் குறிக்கோள் பற்றிய ஆழ்ந்த புரிதல் உடையவராகவும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகள் மேலதிக தகவல்களுக்காக பல்கலைக்கழக இணையத்தளமான http:/www.seu.ac.lk இனைப் பார்வையிட அழைக்கப்படுகின்றனர்)

உபவேந்தரானவர் அதியுயர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்திற்கு தகுதியானவர் என்பதோடு சம்பளத்தின் 15% உபசரிப்பு கொடுப்பனவுக்கும் இப்பதவிக்கான ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவார். இப்பதவிக்கான நியமனம் தொடர்பான நடைமுறைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 10.04.2023 ம் திகதியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கை இல 03 / 2023 இனை தயவுசெய்து பார்வையிடவும்.
(இதனை https://ugc.ac.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்)

விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாகவும் விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதியன்று 63 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

(i) பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரி பற்றிய முழுமையான சுயவிபரக்கோவை

(ii) பல்கலைக்கழகத்தின் விருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை அத்துடன் விண்ணப்பதாரி உபவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் சாதிக்கத் திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்கப் பட்டியல்

(iii) தற்போதுள்ள உபவேந்தர் அல்லது முன்னர் உபவேந்தர் பதவி வகித்த ஒருவர் விண்ணப்பதாரியின் மேலே பிரிவு (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் தனது முன்னைய பதவிக் காலத்தில் நிறைவேற்றிய சிறப்பான செயற்பாடுகள் பற்றிய ஓர் அறிக்கை

(iv) விண்ணப்பதாரி குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து அவர் பணியாற்றும் அரசசேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டத் தாபனங்கள் மற்றும் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தவிர்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குனரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதைக் குறிப்பிடும் ஒரு கடிதம்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையொன்றில் விண்ணப்பதாரி ஒருவர் பேரவையின் விசேட கூட்டத்தின் முன் நேர்டியாக சமுகமளிக்க முடியாது போகும் வேளையில் செயலாளருக்கான முன்னறிவித்தல் ஒன்றின் மூலம் அவர் **மெய்நிகர்** (online) ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்.

தகுதியுள்ள அனைத்து அபேட்சகர்களும் மதிப்பீட்டுக்காக சிறப்புப் பேரவைக் கூட்டத்தின் முன்னிலையில் நேர்முகத் தேர்வொன்றுக்காக அழைக்கப்படுவர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பேரவைக் கூட்டத்தின் முன்பாக குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாது ஒரு சுருக்க முன்வைப்புச் செய்யுமாறு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் மேலே கேட்கப்பட்ட பொருத்தமான ஆவணங்களோடு **பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** எனும் முகவரிக்கு அந்தரங்க உறையில் இடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் மூலமாக அல்லது நேரடியாக **06.03.2025** பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கச் செய்தல் வேண்டும்.

மேலும், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் மென் நகல் பிரதியுடன் வேறு ஏதேனும் துணை ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் இணைத்து PDF வடிவில் registrar@seu.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "**துணைவேந்தர் பதவி**" எனக் குறிக்கப்பட வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**எம்.ஐ.நௌபர்**
பதில் பதிவாளர் / பேரவைச் செயலாளர்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
06.02.2025